இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 30-12-2023

# ஒட்டுக் கேட்க ஒரு சட்டமா?

ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள ஒரு சட்டம், மொபைல் போன் நெட்வொர்க்கை கையகப்படுத்தும் திட்டமாக அமைந்துள்ளது. இதன்மூலம் தனி நபர்களுக்கு இடையேயான தகவல் தொடர்புகளையும் ஒன்றிய அரசு தலையிட்டு எடுத்துக் கொள்ள முடியும். 'மொபைல் போன் நெட்வொர்க்கை அரசு கையகப்படுத்தலாம்' என்றே பல செய்தி நிறுவனங்கள் தலைப்பிட்டுள்ளன.

நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு, பொது அவசரச் சூழல் போன்ற காரணங்களுக்காக, 'மொபைல்போன் நெட்வொர்க்' உட்பட தொலைத்தொடர்புக் கட்டமைப்புகளை, ஒன்றிய அரசு தற்காலிகமாக தன்வசப்படுத்திக் கொள்ளும் வகையில், புதிய தொலைத்தொடர்பு மசோதா, மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்திய தந்தி சட்டம், இந்திய கம்பியில்லா தந்தி சட்டம் போன்ற பழைய சட்டங்களுக்கு மாற்றாக, நவீன தொழில்நுட்பக் காலத்துக்கேற்ப, தொலைத் தொடர்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கடந்த 138 ஆண்டுகளாகப் பின்பற்றி வந்த தொலைத் தொடர்புச் சட்டத்தினைத் திருத்த முயற்சிக்கிறது பா.ஜ.க. அரசின் சட்டம். தொலைத் தொடர்புத் துறையில், ஊடகங்கள் வெளியிடும் செய்திகள், தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்துவதாக இருப்பின், ஒன்றிய அரசு அக் குறிப்பிட்ட ஊடகத்தை முடக்கலாம் என்ற பிரிவையும் இதில் இணைத்திருக்கிறது. இது முழுக்க முழுக்க ஊடக சுதந்திரத்தைப் பறிக்கும் செயல் என எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.**

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற புகைக் குண்டுவீச்சு விவகாரம் தொடர்பான அமளிக்கு இடையே இந்த மசோதாவை, ஒன்றிய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தாக்கல் செய்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு, அவசர நிலை, பேரிடர் நிர்வாகம், நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு போன்ற காரணங்களுக்காக, மொபைல் போன் உள்ளிட்ட தொலைத்தொடர்பு நெட்வொர்க்கை, ஒன்றிய அரசு அல்லது மாநில அரசு அல்லது அரசுகளால் நியமிக்கப்படும் அதிகாரிகள் கையகப்படுத்த இந்த மசோதா வழிவகுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுறுத்தலாக உள்ள தகவல் பரிமாற்றங்களைத் தடுத்து நிறுத்துவது, தொலைத் தொடர்புச் சேவையைத் துண்டிப்பது போன்ற அதிகாரமும் அரசுக்கு வழங்கப்படுகிறது. இதன்படி, தனிநபர்களுக்கு இடையேயான தகவல் தொடர்புகளையும் ஒன்றிய அரசு தலையிட்டு எடுத்துக் கொள்ள முடியும்.

ஒன்றிய, மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பத்திரிகையாளர்கள், பணி நிமித்தமாக அனுப்பும் செய்திகளில் அரசுகள் தலையிடாது. அதே நேரத்தில் தேசியப் பாதுகாப்பை மீறுவதாக இருந்தால் மட்டும் அதில் அரசுகள் குறுக்கிட முடியும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதேநேரத்தில் சட்டவிரோதமாக தொலைபேசியை ஒட்டுக்கேட்போருக்கு மூன்று ஆண்டுகள் சிறை, 2 கோடி ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

இந்தப் புதிய சட்டத்தின்படி, தொலைத் தொடர்பு தொடர்பான சர்ச்சைகளுக்குத் தீர்வு காணும் அமைப்பும், ஆணையமும் அமைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த மசோதா நிதி மசோதாவாகக் கொண்டு வரப்பட்டதாலும், இதற்கு மாநிலங்களவையில் ஒப்புதல் பெற வேண்டியதில்லை என்பதாலும் எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. மசோதாவில் தன்மறைப்பு ( தனிமனித பிரைவசி) சார்ந்த பிரச்சினைகள் இருப்பதாகவும், எனவே, நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு இதனை அனுப்ப வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

இரண்டுநபர்களுக்கு இடையே பகிரப்படும் செய்திகளை, தேவைப்பட்டால் தொலைத்தொடர்பு நிறுவனம் அரசுக்கு வழங்கலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேசியப் பாதுகாப்புச் சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுவது மற்றும் பொதுக் கொள்கையின் அடிப்படையில், ஒன்றிய அரசால் கண்காணிக்கப்பட்டு, இணைப்பு துண்டிக்கப்படும் என்றும், உளவுபார்க்கும் கருவிகளே இல்லாமல் இந்தச் சட்டத்தின் துணைக்கொண்டு ஒன்றிய அரசால் ஒருவரை ஒட்டுக்கேட்க முடியும்; இதற்கு மாநில அரசுக்கும் உரிமை உண்டு என்றும் கூறப்பட்டாலும், தொலைத்தொடர்புத்துறை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், அதன் முழுமையான கட்டுப்பாடு ஒன்றிய அரசுக்குச் செல்கிறது.

**தொலைத் தொடர்பு ஊடகங்களின் உரிமங்கள் தொடர்பான புது வரையறையும், இம்மசோதா முன்மொழிகிறது. இதன் மூலம், தொலைத் தொடர்புச் சேவைகள், கருவிகள், உள்கட்டமைப்பு, வலைப்பின்னல் போன்ற அனைத்தும் ஒன்றியத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற கட்டாயம் எழுந்துள்ளது. இதன் மூலம் கருத்துரிமை முழுவதுமாகப் பறிக்கப்படுகிறது.**

**ஒவ்வொரு நாளும் நடக்கக்கூடிய செய்திகளை, பல்வேறு பகுதிகளிலிருந்தும், பலதரப்பட்ட மக்களிடமிருந்தும் சேகரித்து உலக மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஊடகத்தைக் கட்டுப்படுத்த நினைப்பது, நாட்டின் வெளிப்படைத் தன்மைக்கு மிகப்பெரிய சவாலாக அமையும். இந்த மசோதா மக்களின் அடிப்படை உரிமையை கேள்விக்குறியாக்கப் பார்க்கிறது.**

இந்த மசோதா மிகமிகக் கடுமையானது; இணையத்தை முடக்குவது ஆகும். வாட்ஸ்அப், டெலிகிராம், இமெயில் ஆகிய சேவைகளை இது குறிவைக்கிறது.

பொதுப் பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு நலன் கருதி என்று ஒன்றிய அரசுக்கு வழங்கும் அதிகாரங்கள் பெரும்பாலும் சர்ச்சைக்குரியவை ஆகும். இஸ்ரேலிய நிறுவனம் செய்த பெகாசஸ் நடவடிக்கைகள், இனி சட்டபூர்வமானவை ஆகலாம். 'நாட்டுக்கு ஆபத்தானவர்கள்' என்று யாருடைய போனையும் இடை மறித்துக் கேட்கலாம்.

**இஸ்ரேலைச் சேர்ந்த என்.எஸ்.ஓ. நிறுவனத்தின் பெகாசஸ் மென் பொருள் மூலம் உலகம் முழுவதும் உள்ள மனித உரிமைப் போராளிகள், பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட 50 ஆயிரம் பேரின் செல்போன் தகவல் திருடப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியானது. இந்தச் செய்தியை 'தி கார்டியன்' இதழ் வெளியிட்டுள்ளது. 'வாஷிங்டன் போஸ்ட்' இதழும் வெளியிட்டுள்ளது. இது இந்திய நாடாளுமன்றத்தை அதிர வைத்தது. இறுதியாக பிரச்சினையே கிடப்பில் போடப்பட்டது.**

மணிப்பூர் மற்றும் ஜம்மு காஷ்மீரில் நடத்தப்பட்டது போன்ற இணைய முடக்கத்தை இனி எந்த மாநிலத்தில் செய்தாலும் அதனை சட்டபூர்வமாகச் செய்யலாம்.

பொங்கல் பண்டிகை:

## காட்டன் சேலைகள் உற்பத்தி தீவிரம்!

ஆண்டிபட்டி, டிச. 30 –

ஆண்டிபட்டி அருகே சக்கம்பட்டி மற்றும் டி.சுப்புலாபுரம் பகுதிகளில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு காட்டன் சேலைகள் உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துள்ளது.தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே உள்ள சக்கம்பட்டி மற்றும் டி.சுப்புலாபுரம் பகுதிகளில் சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைத்தறிகளும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்களும் நெசவு தொழில் செய்து வருகின்றனர்.

தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையான தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சக்கம்பட்டி மற்றும் டி.சுப்புலாபுரம் பகுதிகளில் அதிகளவு காட்டன் சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பொங்கல் பண்டிகைகள் தொடங்குவதற்கு 2 மாதங்களுக்கு முன்பாகவே பொங்கல் பண்டிகைக்கென காட்டன் சேலைகள் உற்பத்தி தொடங்கி விட்டது. இந்த காட்டன் சேலைகள் உற்பத்தி தீவிரமாக நடைபெற்று வருவதுடன் விற்பனையும் சூடுபிடித்துள்ளது. மேலும் பொங்கல் பண்டிகைக்காக உற்பத்தி செயய்ப்பட்ட காட்டன் சேலைகள் அதிக அளவு வெளி மாவட்டங்களுக்கு விற்பனை செய்யப்படும்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.12.2023) தலைமைச் செயலகத்தில், மாலை முரசு நிர்வாக இயக்குநர் இரா. கண்ணன் ஆதித்தன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

# கிளாம்பாக்கத்தில் - கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

**சென்னை, டிச. 30-**

**சென்னையில் விழாக் காலங்களில் ஏற்படும் கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு - செங்கற்பட்டு மாவட்டம் – கிளாம்பாக்கத்தில் கழக அரசு, ரூ.400 கோடி மதிப்பீட்டில் பிரம்மாண்டமாகக் கட்டியுள்ள, "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தின்" திறப்பு விழா இன்று காலை மிகச் சிறப்புற நடைபெறுகிறது.**

**இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை" திறந்து வைத்து அதனை மக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.**

அதன் விபரம் வருமாறு:-

சென்னையில் ஆண்டுதோறும் மக்கள்தொகை அதிகரித்து வருவதற்கு ஏற்ப வாகனங்களின் எண்ணிக்கையும் உயர்ந்து கொண்டே செல்வதறிவோம்! இதனால் சென்னையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில்தான் சென்னையில் வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்கத்தில் சென்னை புறநகரில் பெரிய பேருந்து முனையமொன்று அமைக்க கழக அரசு எண்ணியது. அதன்படி செங்கல்பட்டு மாவட்டம் கிளாம்பாக்கத்தில் பிரமாண்டமான பஸ் நிறுத்தத்துடன் கூடிய முனையம் அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டது.

இதையடுத்து 59.86 ஏக்கர் பரப்பளவில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் புதிய பஸ் முனையம் கட்டும் பணி தொடங்கியது. சுமார் 1,200 மீட்டர் தூரத்துக்கு மழை நீர் கால்வாய் அமைக்கப்பட்டது. இந்தப் பணிகள் முழுவதுமாக முடிந்த நிலையில் பொங்கல்திருநாளையொட்டி கிளாம்பாக்கம் பேருந்து முனையம் திறக்கப்படுகிறது. முன்னதாக இதனையொட்டி பேருந்துகள் சோதனை ஓட்டமும் தொடங்கி நடைபெற்றது.

இந்நிலையில் இன்று (டிசம்பர் 30ம் தேதி) சென்னை கிளாம்பாக்கத்தில் மிகப் பிரமாண்டமாக உருவாகியுள்ள 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை' முதல்வர் ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

மழை வெள்ள பாதிப்பால் பேருந்து முனையம் திறப்பு விழாவை பிரமாண்டமாக நடத்தாமல் எளிய முறையில் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. அதன்படி இன்று காலை 11 மணிக்கு முதல்வர் ஸ்டாலின் அவர்கள், இப்பேருந்து முனையத்தை திறந்து வைத்து பேட்டரி வாகனத்தில் சுற்றிப் பார்க்கிறார்.

இதனையடுத்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வர உள்ளது. கிளாம்பாக்கம் பேருந்து முனையம் மக்கள் பயன்பாட்டுக்கு வருவதன் மூலம் சென்னையில் வாகன நெரிசல் ஓரளவு கட்டுக்குள் வரும் எனின் அது மிகையல்ல;

இந்தப் பேருந்து முனையத்தின் சிறப்புகள் வருமாறு:

- பேருந்து நிலையத்தின் மொத்த பரப்பளவு 88.52 ஏக்கர், கட்டத்தின் மொத்த பரப்பளவு 60,451.41 சதுர மீட்டர்களாகும்.
- பேருந்து நிலையம் முழுப் பயன்பாட்டிற்கு வரும்பொழுது நாள் ஒன்றுக்கு 1 லட்சம் மக்கள் பயணிப்பார்கள்.
- மருத்துவமனை, 4 உணவகங்கள் மற்றும் 100 கடைகள் இம்முனையத்தில் அமைக்கப் பட்டுள்ளன.
- 6 ஏக்கர் நிலப்பரப்பில் எழில்மிகு நீருற்று, நடைபாதையுடன் கூடிய பூங்கா இப்பேருந்து முனையத்துக்கு எழில் சேர்க்கிறது. 2,310 பேருந்துகள் தினந்தோறும் இயக்கப்படும்.
- 540 கழிவறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிட வசதிகள் உள்ளன.
- 4 குடிநீர் (ஆர்.ஓ. பிளாண்ட்) சுத்திகரிப்பு நிலையங்களும் - 12 இடங்களில் குடிநீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை - சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னையை அடுத்த கிளாம்பாக்கத்தில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுள்ள "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத் திறப்பு விழா" குறித்த நிகழ்ச்சி நிரல் விபரம் வருமாறு:-**

இன்று (30.12.2023) காலை 11.00 மணிக்கு விழா தொடங்குகிறது.

முதல் நிகழ்வாக – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கிளாம்பாக்கம் பேருந்து முனையக் கட்டிடத்தின் கல்வெட்டினையும் பேருந்து முனையக் கட்டிடத்தினையும் திறந்து வைக்கிறார்.

அதனையடுத்து - பேருந்து முனைய வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து - மின்கல ஊர்தியில் பிரதானக் கட்டிடத்திலிருந்து பேருந்து நடை மேடைக்கு வருகை தருகிறார்.

விழாவில் - இந்து சமயம், அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு வரவேற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவிற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் முன்னிலை வகிக்கிறார்.

அமைச்சரின் வரவேற்புரையை அடுத்து – முதல்வர் அவர்கள் அரசுப் பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைக்கிறார்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி நன்றியுரையாற்றுகிறார்.

நன்றியுரையை அடுத்து முதலமைச்சர் அவர்கள் மின்கல ஊர்தியில் பேருந்து விழா மேடையிலிருந்து பிரதானக் கட்டிடத்தில் உள்ள கூட்டரங்கிற்கு வருகை புரிகிறார்.

அங்கு - கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தின் செயல்விளக்க குறும்படத்தை பார்வையிடுகிறார். (3 நிமிடங்கள்)

மேலும் இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பிக்கிறார்கள்.

# கலைஞர் மீது மிகுந்த மரியாதை கொண்டவர்!

## தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மறைவுக்கு அமைச்சர் துரைமுருகன் இரங்கல்!



விஜயகாந்த்
நடிகர் என்ற பந்தா இல்லாதவர்1
பழகுவதற்கு இனிய நண்பர்!
தமிழ் மொழி மீதும்,
தமிழ் மக்கள் மீதும்
அதிக பற்று கொண்டவர்!
தமிழுக்காக எந்தத் தியாகத்திற்கும்
தயாராக இருந்தவர்!
கலைஞர் மீது மிகுந்த மரியாதை கொண்டவர்!
அவருடைய மறைவு என்பது
ஜாதி, மதம், மொழி கடந்து,
ஏன் நாடு கடந்தும் கூட
பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது!
அவரை இழந்து வாடும்
அவருடைய குடும்பத்தினருக்கும்,
தொண்டர்களுக்கும்,
திரையுலக நண்பர்களுக்கும்
என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
அவருக்கு எனது அஞ்சலி....

**அமைச்சர் துரைமுருகன்**
கழகப் பொதுச் செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்

உயிரிழப்பு இல்லா புத்தாண்டு: மெரினா, எலியட்ஸ் கடற்கரை சாலைகளில்

# டிச.31 இரவில் வாகனப் போக்குவரத்துக்குத் தடை!

## சென்னை மாநகர காவல்துறை அதிரடி!

*சென்னை, டிச. 30 -*

*2024 ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டங்களை முன்னிட்டு எப்போதும் இல்லாத வகையில் இந்த ஆண்டு சென்னை மாநகர காவல் துறை 'உயிரிழப்பு இல்லா புத்தாண்டிற்கு முன்னாள்' என்ற தலைப்புடன் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன்படி டிச.31ம் தேதி இரவு மெரினா கடற்கரை, எலியட்ஸ் கடற்கரை பகுதிகளில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வருவதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இதுகுறித்து சென்னை மாநகர காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கை: காமராஜர் சாலை மற்றும் எலியட்ஸ் கடற்கரை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட உள்ள போக்குவரத்து ஏற்பாடுகள் வருமாறு:*

*கடற்கரை உட்புற சாலை 31ம்தேதி இரவு 7 மணி முதல் மறுநாள் அதிகாலை 6 மணி வரை போக்குவரத்துக்காக மூடப்படும். கடற்கரை உட்புற சாலையில் 7 மணி முதல் வாகனங்கள் நிறுத்த அனுமதிக்கப்படாது. அனைத்து வாகனங்களும் கலங்கரை விளக்கம் சந்திப்பு வழியாக மட்டுமே வெளியேற அனுமதிக்கப்படும்.*

*இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*